ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."—

மலர் 5. Vol 5. விக்கிரம ஹு கார்த்திகைமீ 1உ நவம்பர்-1940 இதழ் 8. No 8.

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமிமலை)

நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து
நாலாறு நாலுபற்று வகையான

நாலாரு மாகமத்தி னூலாயஞானமுத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக

நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்கு னருள்கூர

நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாஅனேச்சொ லருள்வாயே

சேவேறு மீசர்சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா

தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாளவெட்டு
தீராகு காகுறத்தி மணவாளா

காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சு வாமிவெற்பின் முருகோனே

கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே

பதவுரை:

சே எறும் ஈசர் சுற்ற - இடபத்தின் மீது ஊர்ந்தருளுகின்ற சிவபெருமான் தேவரீரை வலம் வந்து வணங்க, மாஞான போதபுத்தி - சிறந்த ஞானமாகிய மெய்யுணர்விஞலறியத் தக்கதை, சீராக உரைத்த - (எ-அசை) செம்மையாக உபதேசித்த, குருநாதா - குருபரரே! தேரார்கள் நாடுசுட்ட - தங்கட்குப் பகைவர்களாகிய தேவர்களுடைய பொன்னுலகத்தை சுட்டு எரித்த, சூரார்கள் மாள வெட்டு - சூரபதுமன் முதலியோர் இறந்தொழிய வெட்டித் துணித்த, தீரா - தைரியமுடையவனே! குகா - குகப்பெருமானே! குறத்தி மணவாளா - வள்ளியம்மையாரது கணவரே! காவேரி நேர்வடக்கில் - (ஏ-அசை) காவேரி நதிக்கு நேரான வடப்புறத்தில், வாவி - குளங்கள் நிறைந்தும், பூமணத்த கா ஆர் - மலர்களின் நன்மணங் கமழும் குளிர்ந்த, சோலைகள் பல சூழ்ந்தும் விளங்கும், சுவாமி வெற்பின் முருகோனே - சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுளே! கார் போலு மேனி பெற்ற - நீருண்ட மேகம் போன்ற திருமேனியையுடைய, மாகாளி - பெருமை பொருந்திய காளியும், வாலை - இளமையுடையவரும், சத்தி - சத்தியும், காமாரி வாமி - மன்மதனை யெரித்த சிவமூர்த்தியினது இடப்பாகத்தை யுடையவருமாகிய உமையம்மையார், பெற்ற - ஈன்றருளிய, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! நா எறு பாமணத்த - நாவினில் நின்று வெளிப்படுகின்ற பா மலர்களின் நறுமணங் கமழ்கின்ற, பாதாரமே நிணைத்து - (ஏ-பிரிநிலை) பாத தாமரைகளையே எண்ணி, நால் ஆறு நாலு பற்று வகையான - (4x6 24ம் 4ம் ஆக 28) இருபத்தெட்டு என்ற எண்ணிக்கையுடன் சிவசம்பந்தத்தையுடையதாகி, நால் ஆரும் - சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களை விரித்துரைப்பதாகிய, நூல் ஆய ஆகமத்தின் - அறிவு நூலாகிய ஆகமத்திற் கூறிய, ஞானமுத்தி - பதிஞானத்தாற் பெறுவதாகிய முத்தியைப் பெறுதற்கு, நாள் தோறும் நான் உரைத்த நெறியாக - நாள்தோறும் அடியேன் உமது திருவருளால் சொல்லி அன்பு நெறியிலே சென்று, நீ வேறு எனாது இருக்க - தேவரீர் வேறு என்னுமல் இருக்கவும், நான் வேறு எனாது இருக்க - தேவரீரினின்றும் பிரிந்து நான் வேறு என்னுமல் ஒன்றுபட்டு (அத்துவிதமுற்று), நேராக வாழ்வதற்கு - நேர்மையான இன்ப வாழ்வில் திளைத்து நிற்பதற்கு, உன் அருள் கூர - தேவரீரது திருவருள் பொருந்த, நீடு ஆர் சட் ஆதாரத்தின் மீது - (ஏ-அசை) மேன்மை பொருந்திய ஆறு ஆதாரங்களையுங் கடந்து அவைகட்கு அப்பால் விளங்கும் சகஸ்ராரப் பெருவெளியில் விளங்கும், பராபரத்தை - பெரியபொருள்கட் கெல்லாம் பெரிய பொருளாகிய சிவத்தை, நீ காண் என - நீ காண்பாயாக என்று, அணைச் சொல் அருள்வாயே - ஐக்கிய பதத்தை உபதேசித்து அருள் புரிவீர்.

பொழிப்புரை:

இடப வாகனத்தின் மீது ஏறி எழுந்தருளி வருகின்ற சிவ பெருமான் வலம் வந்து வணங்கி நிற்க, சிறந்த சிவஞான மயமாகிய உண்மைப் பொருளை சிறப்பாக எடுத்து உபதேசித்த குருபரரே! தங்கட்குப் பகைவர்களாகிய தேவர்களுடைய சுவர்க்க உலகத்தைக் கொளுத்தித் துன்பஞ் செய்த சூரபதுமனுதி யசுரர்கள் இறந்தொழிய வெட்டித் துணித்த தீரரே! ஆன்மாக்களின் இதய குகையில் வசிப்பவரே! குறவர் குலத்தில் அவதரித்த வள்ளி நாயகியாரது கணவரே! காவிரி நதிக்கு நேர் வடப் புறத்தில் விளங்குவதும், தடாகங்கள் நிறைந்ததும், நறு மணங்கள் மிக்க பூவனங்கள் சூழத் திகழ்வதுமாகிய சுவாமி மலையில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுளே! நீருண்ட நீலமேகம் போன்ற திருமேனியையுடையவரும், சிறந்த காளியாக அவதரித்தவரும், இளமைப் பருவத்தை யுடையவரும், காமனை எரித்த கண்ணுதற் கடவுளுடைய இடப் புறத்தைப் பெற்றவருமாகிய உமா தேவியார் பெற்றருளிய பெருமிதமுடையவரே! நாவினின்றும் வெளிப் படுகின்ற பா மலர்களின் வாசனை கமழ்கின்ற தேவரீருடைய திருவடித் தாமரைகளை எப்போதும் தியானித்து, சிவ சம்பந்தமுடைய இருபத்தெட்டு வகைப் பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களை விளக்கிக் கூறுகின்ற சிவாகமங்களாகிய அறிவு நூல்களிற் கூறிய பதிஞானத்தாற் கிடைக்கும் முத்தியைப் பெறுதற்கு அடியேன் திருவருள் துணை கொண்டு கூறிய அன்பு நெறியாகச் சென்று, தேவரீரும் அடியேனும் வேறு என்னுதஒன்றுபடும் அத்துவித நிலையை நேர்மையாக அடைந்து அப் பேரின்பத்தில் வாழ்வதற்கு தேவரீரது திருவருள் பொருந்த, மேன்மை பொருந்திய ஆறு ஆதாரங்களுங் கடந்து அப்பால் விளங்கும் சகஸ்ராரப் பெருவெளியில் திகழும் பரம் பொருளை நீ காணுதி என்று ஐக்கிய பதத்தை உபதேசித்தருள் புரிவீர்.

விரிவுரை:

நாவேறு பாமணத்த பாதாரம்:---

அடியார்கள் அன்பெனும் நார் கொண்டு இன்னிசைச் சொல்லெனும் மலர்களை நாவிலே தொடுத்த பாமாலைகளை ஆறுமுகப் பெருமான் திருவடியிலே சூட்டுவர். எம்பெருமான் திருவடியில் அப்பாமணம் என்றும் இடையறாது கமழ்ந்து கொண்டிருக்கும்.

"முடியவழி வழி யடிமை யெனுமுரிமை யடிமைமுழு
தலகறிய மழலைமொழி கொடுபாடுமாசுகவி
முதலமொழி வனகிபுண மதுபமுக ரிதமவுன
முகுள பரிமளநிகில கவிமாலை சூடுவதும்"

பாதாரவிந்தம் என்பது பாதாரம் என்று கடைக்குறையாயிற்று.

நாலாறு நாலுபற்று வகையான நாலாறு மாகமத்தின்:---

சிவாகமங்கள் இருபத்தெட்டு. வேதம் பொது நூல்; ஆகமம் சிறப்பு நூல். ஆகமம் என்ற சொல்லுக்கு "வந்தது" என்று பொருள். இறைவனுடைய நாவிலிருந்து வந்தது எனப் படும். ஆ - பாசம், க - பசு, ம - மல நாசம் என்றும்; ஆ - சிவ ஞானம், க - மோக்ஷம், ம - மல நாசம்; மலத்தைக் கெடுத்து, சிவ ஞானத்தைக் கொடுத்து, மோக்ஷத்தையருளுவது என்றும் பொருள்படும்,

ஆகமங்கள் இருபத்தெட்டாவன:— காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்ரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம், புரோத்கிதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம் பாரமேசுரம், கிரணம், வாதுளம்.

இந்த ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களுடன் கூடியன. இவற்றுள் சரியாபாதத்திலே சமயாசாரங்களும், சமய விசேட நிருவாண ஆசாரியாபிடேக விதிகளும் கூறப் படும். கிரியா பாதத்திலே மந்திரங்களின் உத்தாரம் சந்தியாவந்தனம், பூசை, ஜெபம், ஓமம் முதலியன கூறப் படும். யோக பாதத்திலே பிராணாயாம முதலிய அங்கங்களோடு கூடிய

சிவயோகலக்கணம் செப்பப்படும். ஞான பாதத்திலே பதிபசு பாசம் திரிபதார்த்த லக்ஷணங்கள் பேசப்படும்.

நீ வேறெனதிருக்க நான்வேறெனதிருக்க:--

ஜீவனும் சிவனும் அத்துவிதமுற்று நிற்கும் இரண்டற்ற நிலை. அது இருவினையொப்பு மலபரிபாகமுற்றபொழுது சத்திபதி யும். அருள் பதிந்த பின் அத்துவித நிலையெய்தும்.

“இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயுநானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையரு ளிடைமருதில்
ஏகநாயகா லோகநாயகா”

திருப்புகழ்

நீடார்சடாதரத்தின்மீதே பராபரத்தை:---

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறாதாரங்கட்கும் அப்பாற்பட்ட ஆனந்த மேலை வெளியில் விளங்கும் பரவெளியை என்பது.

“ஆனந்த மேலை வெளியேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே”

திருப்புகழ்.

சேவேறு மீசர்:--

சே - இடபம் சர்வ சங்கார காலத்தில் எல்லாம் அழிய அற மொன்றே எஞ்சி நின்றது. அது இடபமாக நிற்க ஏறிலா ஈசன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு கால்களுடன் கூடிய அத்தருமமாகிய விடையின்மீது ஏறியருளினர்.

தேரார்கள்:---

தக்கயாகத்தில் தேவர்களுங் கலந்திருந்து சிவபரம்பொரு ளின் தனிப்பெருந் தலைமையை ஆராயாது கிடந்தனர். ஆதலால் தேவர்கள் தேரார்கள் என்றனர், தேர்தல் - ஆராய்தல்,

உ

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(151-வது பக்கத் தொடர்ச்சி)

21) மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான கரசுர பாஸ்கரனே.

பதவுரை:

கிண்கிணிமுதள - கிண்கிணிகள் ஒலிக்கும்படியான, சரணப்ரதாப - திருவடியையுடைய வீரரே! சசிதேவி - இந்திராணியின், மாங்கல்யதந்து - மங்கல நாணினை, ரக்ஷ ஆபரண - காப்பாற்றித் தாங்கியவரே! க்ருபை ஆகர - கருணைக்கு உறைவிடமானவரே! ஞான ஆகர - அறிவு வடிவினரே! சுர பாஸ்கரனே - தேவ சூரியனே! என்றும் வாய்த்த துணை - எந் நாளும் இனிது வாய்த்த துணையாக, கிரண கலாபியும் - ஒளியுள்ள மயிலும், வேலும் - வேற் படையும், உண்டே - (ஏ - அசை) அடியேங்களுக்கு உள; ஆதலால், மரணப்ர மாதம் - இறப்பு என்ற அபாயமானது, நமக்கு - அடியார்களாகிய எங்களுக்கு, இல்லை ஆம் - இல்லை ஆகும்.

கருத்துரை:

சிவகுருவே! சூராந்தக! குக! வள்ளி மணாள! சுவாமிமலை யாண்டவரே! பார்வதி பால! தேவரீருடைய திருவடியை நினைத்து சிவாகம நெறி சென்று அத்துவிதமுற்று, இன்புற உபதேசித்தருள்வீர்.

விரிவுரை:

மரணப்ரமாதம்:--

மரணமென்பது ஒரு பெரிய அபாயம். அது தடுக்க முடியாத ஒன்றும். எத்துணைச் செல்வமுடையோராலும், எத்துணைச் சிறந்த வீரர்களாலும், இணையற்ற போராற்றலுடையோராலும், வெண்கொற்றக் குடையின் கீழிருந்து தனிச் செங்கோல் தாங்கி உலகெலா மரசுபுரியும் வாள் வேந்தராலும், ஐயந்திரிபறக்கற்ற நல்லிசைப் புலவராலும், மரணத்தைத் தடுக்க முடியாதென்பது கண்கூடு.

உடம்பினின்றும் உயிர்பிரியும் போது அளவற்ற துன்பத்தை உயிர் அடைகின்றது. பயங்களுக் கெல்லாந் தலையாயது மரணபயமேயாம். "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்" என்ற மணிவாசகத்தையும் உய்த்துணர்க.

நமக்கில்லையாம்:—

மேற் கூறிய பெரிய மரணபயம் காலனையுதைத்த கண்ணுதற் கடவுளுடைய கனல் விழியினின்றும் பரஞ்சுடருருவாய்த் தோன்றிய கந்தக் கடவுளின் அடியார்கட்கில்லை.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்"
—அப்பர்

"வாராதகலந்தகா வந்தபோதுயிர் வாங்குவனே"

"திருமுகம் ஆறுங் கண்ட
தமராகி வைகுந் தனியான ஞானதபோதனர்க் கிங்கு
எமராஜன் விட்டு கடையேடுவந்தினி யென்செயுமே" அலங்காரம்

கிரணக்கலாபி:—

கிரணம் - ஒளி, கலாபம் - தோகை, ஒளியையுடைய தோகை, சினையாகு பெயராய் தோகையை யுடைய மயிலைக் குறித்தது.

வேலும் உண்டே:---

உயர்வுபற்றி அடை ஒன்றும் கூறினாரில்லை.

கிண்கிணிமுகுள சரணப்ரதாப:---

முருகவேள் என்றுமகலாத இளம்பூரண ராதலால் அவருடைய திருவடியில் கிண்கிணி ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

"இனியமாத சிலம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்"
—திருப்புகழ்

சகல ஆன்மாக்களும் சரணம் புகுந்து உய்வுபெற நிற்பது இறைவன் திருவடியே யாகலான், அதற்குச் சரணமெனப் பட்டது.

"குமரா சரணம் சரணமென்றண்டர் குழாந் துதிக்கும்
அமராவதியிற் பெருமாள்"

சசிதேவிமாங்கல்ய தந்துரக்ஷாபரண:--

இந்திரன் மாண்டிருப்பனேல் இந்திராணி சூராதியசுரரால் மங்கலநாணிழந்திருப்பள். அங்ஙனம் இழக்கா வண்ணம் எந்தை கந்தவேள் அயிராணியின் மங்கலநாணைக் காத்து அருள்புரிந்தவர்.

"வெள்ளி மலையெனவே
கால் வாங்கி நிற்குங் களிற்றன் கிழத்தி கழுத்திற் கட்டு
நூல் வாங்கிடாதன்று வேல் வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே'
—அலங்காரம்

இந்திராணி மாங்கல்ய தந்து ரக்ஷாபரண
இகல்வேல் விநோதன்" மயில்விருத்தம்

ஞானமே முருகவேட்கு வடிவம். ஞானத்திற்குப் பிறப்பிடமும் அவரே; உறைவிடமும் அவரே! "ஞானந்தா னுருவாகிய நாயகன்" என்ற முதல்வன் புராணவசனத்தாலும், "ஞானபிராமதாபவடிவமும்" "ஞானபண்டிதஸ்வாமீ" என்ற தமிழ் வேதத் திருவாக்குகளாலும் தேர்ந்து தெளிக. முருகனை வழிபட்டார்க்கே மெய்ஞ்ஞானம் உண்டாகும்.

அகத்திருளை நீக்கும் ஞானசூரியனாகிய கந்தப் பெருமான் தேவர்களுக்குள்ள அகற்றற்கரிய அந்தகாரத்தையும் நீக்குகின்றார்.

கருத்துரை:

ஞானபண்டிதரே! தேவாதித்தரே! தேவரீரது வேலுமயிலும் எமக்குத் துணையாயிருப்பதால், இனி எமக்கு மரண பயம் இல்லை.

ஓம் குஹாய நம :

சிவானந்தலஹரீ

(152-வது பக்கத் தொடர்ச்சி)

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(68) அமிதமுத ம்ருதம் முஹுர் துஹந்தீம்
விமல பவத்பத கோஷ்ட மாவஸந்தீம்!
ஸதய பசுபதே ஸுபுண்ய பாகாம்
மம பரிபாலய பக்திதேநு மேகாம்!!

பதவுரை:

ஸதய	- கருணையுடன் கூடியவரே!
பசுபதே	- ஆன்மாக்கள் அனைவருக்குந் தலைவரே!
அமிதமுதம்ருதம்	- அளவிடமுடியாத மகிழ்ச்சியாகிற அமிர்தத்தை
முஹு:	- அடிக்கடி
துஹந்தீம்	- கறக்கிறதாயும்
விமல பவத்பத கோஷ்டம்	- நிர்மலமான தேவரீருடைய திருவடியாகிற தொழுவத்தில்
ஆவஸந்தீம்	- வசிக்கிறதாயும்
ஸுபுண்ய பாகாம்	- உயர்ந்த புண்ணியத்திற்குப் பயனாகின்ற
ஏகாம்	- ஒன்றாயுமிருக்கின்ற
மம	- அடியேனுடைய
பக்தி தேநும்	- பக்தியென்கின்ற பசுவை
பரிபாலய	- தேவரீர் காப்பாற்றியருள்வீர்.

பொழிப்புரை:

பரிபூரண கருணையுடைய பசுபதியே! அளவற்ற ஆனந்தமென்னும் பாலை அடிக்கடி கொடுக்கிறதாயும், நிர்மலமான தேவரீருடைய திருவடியாகிய தொழுவத்தில் இருப்பதாயும், சிறந்த புண்ணியத்திற்குப் பயனாகிற ஒப்பற்ற அடியேனுடைய பக்தியாகின்ற பசுவை தேவரீர் காப்பாற்றியருள்வீர்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(158-வது பக்கத் தொடர்ச்சி.)

இலக்கத்தென்மர்களும், வீரவாகுதேவரும், இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களும் சூரபன்மனால் வலியிழந்து உடைந்த தன்மையை வடிவேற் பெருமான் கண்டு, தமது தேரை நடத்துவித்து சூரன் முன்னே வந்தருளினர். அநந்தகோடி சூரியர்கள் திரண்டு ஒன்றாகி உதித்தாற் போன்ற நின்மலராகிய முருகக் கடவுளின் திருவுருவத்தைச் சூரபன்மன் தரிசித்தான்.

முண்டக மலர்ந்த தன்ன முவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரமீ ராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பு மார்த்துஞ் சரணமுந் தெரியக் கண்டான்.

சூரபன்மன் பன்னாள் தவஞ்செய்ததும், பலயுகங்களாக அழிவின்றி யிருந்ததும், வேதங்களாலும் அறியமுடியாத அறுமுகக் கடவுளுடைய பேரழகு பொருந்திய திருவுருவத்தைத் தரிசித்தற்கே போலும்? மாதவர்கள் மனத்தாலும் அறியமுடியாத பெருமானைத் தெரிசித்து உய்வு பெற்றான். அவன் தவமே தவம்! சூரபன்மனைத் தீவினையாளன் என்று தெரியாதவர் சொல்லுவர். அவன் செய்த நல்வினையாலன்றோ தேவரும் மூவரும் இன்னும் காண்டற்கரிய தனிப்பெருங் கடவுள் போர் செய்யவருபவரைப் போல தாமேவந்து காட்சி வழங்கினர். சிவமைந்தர் என்றுணர்ந்த சூரன் சொல்வானுபினன்.

"சிவகுமார! பூதரும் வீரருந் தோற்று ஓடி ஒளிந்தனர். ஒற்றனாக வந்த வீரவாகுவும் மாய்ந்தனன். சிறுபாலனாகிய நீ என்னை வெல்ல வந்த செயல் நன்று! நன்று! உனது பிதாவும் மாலும் அயனும் என்னுடன் போர்செய்யக் கருதிலர். எனது அழிபாவரத்தையும் படையின் ஊக்கத்தையும் அளப்பற்ற ஆக்கத்தையும் என் பெருமையையும் நீ சிறிதும் எண்ணினையில்லை. உமையம்மையும் உன்னை யழைத்து வந்த உம்பரும் வருந்த ஒரிமைப் போதில் உனது வலியை யழிப்பேன்" என்றான்.

அருளே வடிவாகக்கொண்ட ஆறுமுகவள்ளல் அதுகேட்டு "சூரபன்மனே! வாள்வலியும் தோள்வலியும் வரப்பலமும், படைவலியும் உடையோமென அகந்தை கொள்ளாதே; இனி அதனை விடுதி. நின் வலியை விரைவில் அழிப்போம். சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினின்று தோன்றிய சிறுபொறியொன்றே உலகங்களை யெரித்தழிப்பதை யுணர்ந்திலை போலும். பெரிய பாலை சிறு புரை போய் அழிப்பது போல் உன்னை இப்பொழுதே அழிப்போம்" என்றருளிச் செய்தார். சூரன் ஒரு பெரிய மலையனைய வில்லை யெடுத்து வளைத்து உலகமதிர நாணொலி செய்தான். முருகவேள் சண்டதாண்டவ மூர்த்தியின் தூக்கிய திருவடியைப் போன்ற ஒரு பெரிய வில்லை எடுத்து அண்டங்கள் உதிர நாணோதை செய்தார். இருவரும் கணைமாரி சிந்தினர் முருகர் விட்ட 14-பாணங்களும் சூரன் புயத்தை யண்மி மழுங்கியது. அறுமுகவேள் அவன் வச்சிரயாக்கையின் வலியைக் கண்டு புன்முறுவல் பூத்து, ஆயிரம் பாணங்களால் அவன் வில்லை யறுத்தார். பிரமன் தந்த வேலை சூரன் விட்டனன். பெருமான் 14-கணையால் அதனை யறுத்தார். சூரன் வேறு வில்லை யெடுத்து, முருகவேள் விட்ட பாணங்களை மாற்றி 7-பாணங்களை அவர் புயத்தின் மேல் விட்டான். அவை நெருப்பிற் பட்ட பூளைபோல் அழிந்தன. பெருமான் நகைத்து சூரனுடைய வில்லையும் தேரையும் அழித்து, அவனுக்கு ஏமமாய் வந்த 14-இலக்ஷந் தேர்களையும் ஓர் கணப்பொழுதில் அழித்தார்.

சேமத்தேர் யாவும் அழிதலும் சூரன் புகையெழ விழித்து, தான் காவலாய் வைத்திருந்த ஒரு முத்தலைச் சூலத்தை யெறிந்தான். முருகப் பெருமான் அதனை நான்கு கணைகளால் துணிபடுத்தி, ஏழு பாணங்களால் அவனுடைய குடையையும், ஒருபாணத்தால் மணி மகுடத்தையும் அறுத்து, உடம்பெங்கும் பாண மழையைப் பொழிந்து ஏனைய ஆபரணங்களையுந் துணித்தார். சூரன் மானத்தால் வலி குறைந்தான். அது கண்ட அவன் சைன்யங்கள் சுப்ரமண்ய மூர்த்தியை வந்து சூழ்ந்து போராடின. குமார மூர்த்தி தமது ஒரு திருக் கரத்திலுள்ள சக்கரப் படையை விடுத்தார். இரவி இருளை யொழித்தாற் போல் அந்தச் சக்கரம்

சுழன்று ஒரு முகூர்த்தப் பொழுதிற்குள் சூரனுடன் வந்த நூறுயிர வெள்ளம் அசுர சேனைகளையும் அழித்து விட்டு, பெருமான் கரத்தில் வந்து அமர்ந்தது. சூரன் தனியனுயினுன். உதிர வெள்ளம் ஓடியது. கவந்தங்கள் கூத்தாடின. பேய்கள் பசி தீர்ந்தன.

இவ்வாறு சேனைகள் யாவும் முருகன் விடுத்த சக்கரத்தால் அழிந்ததையுணரானுய், தன்னைச் சூழ்ந்திருந்த சேனு வெள்ளங்கள் இறந்ததைக் கண்டு மனம் வெருண்டு, தமியனுய் நின்று, "இப்பாலகன் தனது வேற்படையால் அழித்தனனே? சிவாத்திரத்தால் அழித்தனனே? 'அழிந்து போக' என்று ஒரு சொல்லாலழித்தனனே? இவன் இத்தனை சேனைகளையும் கணப் பொழுதில் அழித்தது எவ்வாறு? இவன் வலி நன்று நன்று" என்று சொல்லி, தேரையும், வில்லையும், முடியையும், குடையையும் இழந்து நிலத்தில் நின்றுன். நின்றவன் பிரமப் படைக் கலத்தை எடுத்து விடுத்தான். அது முருகவேளிடம் கிட்டும் பொழுது அவர் திருக்கரத்திலுள்ள வேற்படை சென்று விழுங்கியது. அது கண்ட சூரபன்மன் வருந்தி விட்டுணுப் படைக்கலத்தை விடுத்தான். அப்படை அளவில்லாத விட்டுணுக்களுடைய உருவங்களை உண்டாக்கிக் கிட்டிய பொழுது, வேற்படை அதனையும் விழுங்கியது. சூரன் அதனைக் கண்டு திடுக்கிட்டு, "இனி சிவப்படைக் கலத்தை விடுத்தால் அதனைத் தடுக்கவல்லார் யார்?" என்று எண்ணி சிவப்படைக் கலத்தை எடுத்து வழிபட்டு விடுத்தான். அப்படைக்கலம் எல்லையில்லாத உருத்திர மூர்த்திகளுடைய கோலம் எத்திசைகளிலும் உண்டாக ஆரவாரித்து, நெருப்பு மழை பொழிந்து கொண்டு விரைந்து சென்றது. திக்கு யானைகள் அலறி வீழ்ந்து அயர்ந்தன; வடவைத் தீ ஓடியது; சேடன் உலைந்தான்; பூமி நெக்கது; மேகங்கள் இடிகளைச் சிந்தி இரிந்தன; கதிரும் மதியும் சுழன்றன; மேரு வெடித்தது; தேவரும் பூதரும் இலக்கத்தொன்பான் வீரருங் கலங்கினர். சிவப்படைக்கலம் இவ்வாறுவர, முருகப் பெருமான் "இது நமது பிதாவினுடைய படை" என்று எண்ணி, ஒரு திருக்கரத்தை நீட்டி, தந்தவன் வாங்கிய தன்மைபோல் பற்றி ஏந்தி நின்றுர். அதனைச் சூரபன்மன் பார்த்து, "இவன் விட்ட படைக்கலங்களுக் கெல்லாம் மாருக ஒன்றும் கணைவிடாமலேயே அவற்றைக் கவர்ந்தான்.

சிவமைந்தன் என்பதைக் காட்டினான். என்னோடு பொருதற்கு இவனன்றி வேறொருவருமில்லை. இவனோடு பொருதற்கு யானன்றி வேறொருவருமில்லை. இவனுடைய வலிமையைக் கண்டேன். இனி இந்தக் குழந்தை செய்வதனைப் பார்ப்பேன்" என்று எண்ணி மௌனமாக நின்றான்.

அருள் வள்ளலாகிய ஆறுமுகக் கடவுள் சூரன் தளர்ந்து நிற்பதை நோக்கி, அவன்மேல் வைத்த திருவருளால் திருவாய் மலர்ந்தருளுவார். "சூரபன்மனே! தேவர்களைச் சிறை செய்தனை. யாம் விடுத்த தூதன் சொற்படி சிறைவிடுத்தாயில்லை. ஆதலால், தாரகனைக் கொன்றதுபோல் நின்னையுங் கொல்ல வந்தோம். வேற்படை இருக்கின்றது. வறியனாய் நின்ற நின்னைக் கொல்வது ஒரு பொருளுமன்று; அரிதுமன்று. ஆயுதமின்றி நிற்கின்ற உன்னைக் கொல்லுதல் முறையன்று. ஆதலால், தேவர்கள் சிறையை விடுத்தியாயின் உய்குவை. இன்றேல் அழிகுவை" என்றார். சூரபன்மன், "இக்குழந்தை என் அழியாவரத்தை யறிந்திலன். படையையும் குடையையும் அழித்தாலும் என்னை அழிக்க வல்லனோ? இன்னுமுள்ள படைகளோடு வந்து போர் செய்து இவனை வெல்வேன்" என்று எண்ணி மாயையால் மறைந்து தன் அரண்மனைக்கு ஏகினான். பெருமான் திருவருளால் வேற்படை விடுத்து அவனுடைய உயிரைக் கவர நினைத்திலன். அரியயனாதி யமரார்கள் அறுமுகக் கடவுளை வணங்கி, "எந்தையே! இதுகாறும் வெற்றியே பெற்ற சூரபன்மன் தோற்றோடினான். நீர் அவனுடன் போர் செய்தல் ஒரு திருவிளையாடலே" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். முருகவேள் திருமுறுவல் செய்து "இனி நம்முடன் வந்து பொருதால் சூரனை யழிப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

போரில் அபர்ந்தோடிய பூதர்கள் ஒருங்கு வந்து கூடி ஆரவாரித்து, சூரன் மதிலையும் கோபுரத்தையும் இடித்து எறிவோம் என்று மதிலை யடைந்தார்கள். மதிலைக் காவல்புரிகின்ற அதிகோரன் என்னும் அவுணன் அசுர சேனைகளுடன் பூதர்களை எதிர்த்தான். பூதர் சிலரும் அவுணர் பலரும் மாண்டனர். அதிகோரன் எழுப்படை தாங்கி பூதரை ஓடி ஓடிக் கொன்றான். மேகர் என்ற

பூத படைத் தலைவர் சீறி அவனை அடித்துக் கொன்றார். பூதர்கள் மதிலை இடித்தெறிந்தார்கள். ஆயிரம் யோசனை யுயரமுள்ள கோபுரத்தைப் பிடுங்கிக் கடலில் வீழ்த்தினார்கள். வீர மகேந்திர புரிக்குள் நுழைந்து எதிர்த்த அசுரர்களைக் கொன்றும் மாளிகைகளைத் தகர்த்தும் அழித்து விட்டு மீண்டு முருகக் கடவுளை வந்து அண்மினார்கள். எம்பெருமான் சேனைகளுடன் பாசறையை யடைந்து தேவர்கள் துதிக்க அரியணையில் வீற்றிருந்தார்.

போரில் தோற்றோடிய சூரபன்மன் நாணத்துடன் படுக்கையில் துயில் வராது புரண்டு கொண்டிருந்தான். இதனை தூதர் பானுகோபனிடம் கூறினார்கள். பானுகோபன் சூரபன்மனிடம் வந்து பணிந்து, "தந்தையே! நேற்று மோகப்படையால் அனைவரையும் மயக்கி வென்றேன். முருகன் ஒரு படைவிட்டு மோகப்படையை யழித்தான். இன்று போய் வெல்ல எண்ணினேன். இதற்குள் நீர் போய் திரும்பினீர். இது முறையோ? நாளை யான் போய் அனைவரையுங் கொன்று திரும்புவேன்" என்றான். சூரபன்மன், "குழந்தாய்! சிவகுமாரன் பெரும் வீரன். அவனைச் சிறியன் என்று எண்ணற்க; இணையற்றவன்; அவனை நான் போய் வெல்வேன். நீ அந்த ஒற்றனை மட்டும் அழித்து விட்டு வருதி" என்றான். பானுகோபன் விடைபெற்றுத் தன் கோயிலை யடைந்தான். அப்பொழுது தூதுவர்கள் வந்து பூதர்கள் மதிலையும் கோபுரத்தையும் வீடுகளையும் இடித்ததைக் கூறினார்கள். பானுகோபன் சினந்து மயனைக் கொண்டு அவற்றை மீளவும் புதுக்கி மாகாயன் என்பவனை பதினாயிரம் வெள்ள அவுணர்களுடன் காவல் வைத்தான். இரவு கழிந்தது. கதிரவன் உதித்தான்.

(தொடரும்)



ஓம் குஹாய நம:

கற்பு.

(163- வது பக்கத் தொடர்ச்சி)

நளாயனி

இவ்வாறு கலங்கி நின்ற மௌத்கல்ய முனிவர் "பெண்ணென்ருல் இவளே பெண்; இவள் சாபத்தால் வந்த தொழு நோயின் துன்பமோ பொறுக்க முடியவில்லை. இந்நோயோடு யான் நளாயனியைச் சந்திப்பேனுயின் இளவரசனாக வந்தது யானே என்று ஐயுறுவாள். இத்தொழு நோய் வந்ததும் ஒரு நன்மைக்கே; இதனை சிலகாலம் பொறுத்து வரச் செய்தால் இதனாலேயே அவளை இன்னுஞ் சோதிக்கலாம்" என்று எண்ணி "தொழுநோயே! சில நாள் கழிந்தபின் நீ என்னை அடைக" என்ருர்—அவருடைய அளவற்ற தவ வலிமையால் அந்நோய் அவரைவிட்டு விலகியது. கதிரவன் மேற்கடலில் வீழ்ந்தான்.

நளாயனி உள்ளமும் உடலும் அயர்ந்து நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சித்தனள். அக்காட்டிலுள்ள கொடிய விலங்குகளும் அக்கற்பரசியின் ஆராத்துயரைக் கண்டு கண்கலுழ்ந்தன. நளாயனி உயிர்த்து எழுந்து நாற்றிசையும் நோக்கி, "ஆருயிர்க் காதல! அன்பின் வடிவே! அருந்தவரே!" என்று கூவிக் கொண்டு, அவ்விரவில் சந்திர ஒளியின் துணைகொண்டு, மலைகளிலும் சோலைகளிலும் சுனைகளிலும் கணவனைத் தேடித் திரிந்தாள். முடிவில் ஒரு சுனைக்கரையில் கண்மூடி தவஞ்செய்வார் போல் இருந்த கணவனைக் கண்டாள். கரை கடந்த களிப்புற்று விரைந்தோடி அவர் பத மலர்களில் வீழ்ந்து கண்ணீரால் திருவடியை நனைத்து, "என் சித்தமிசை குடிகொண்ட செல்வரே! என்னைத் தனியே தவிக்க விட்டு எங்குற்றீர்? அறியாமையால் ஏதேனும் யான் குற்றம் செய்திருப்பினும் மன்னித் தருள வேண்டும், உம்மையே

தஞ்சமாகப் புகுந்துள்ள என்னை இனிக் கைவிடாமல் காப்பாற்றுவீர்" என்று வேண்டினாள். மௌத்கல்யர் மனம் உருகி "பெண்ணரசே! வருந்தாதே! இங்கு இறைவனை ஒரு மனத்துடன் சிந்தனை செய்து கொண்டிருந்ததால் காலங் கடந்ததை யுணராதிருந்து விட்டேன். நம்மனைக்குப் போவோம் வா" என்று அவளை யழைத்துக் கொண்டு தமது குடிசைக்கு வந்தார். கதிரவனும் கீழ்த்திசையில் வந்தான்.

நளாயனி தனக்கு நேர்ந்த துன்பத்தை மறந்து கணவனை விட்டுப் பிரியாமல் அவரடிமலர்த் தொழும்புகளைச் செய்து மகிழ்ந்திருந்தாள். சில பகல்கள் கழிந்தன. நளாயனி கூறிய வசை மொழிப்படி முனிவரைத் தொழுநோய் தொடர்ந்தது. கால்களிலும் கைகளிலும் புண்கள் மிகுந்து அவற்றில் சீழும் இரத்தமும் சொரிந்தன. அதனைக் கண்ட அம்மாதரசி மனம் பதைத்து தனக்குத் தெரிந்த பல பச்சிலைகளைக் கொணர்ந்து அரைத்துப் பூசினாள். நோய் வர வர மிகுதியாயிற்று. புழுக்கள் மலிந்து உதிர்ந்தன; ஈக்களும் எறும்புகளும் மொய்த்தன; முடை நாற்றம் வீசியது; காணக் கண் கூசியது; கிட்ட நெருங்குதற்கு முடியாத அருவருப்பையுண்டாக்கிற்று. ஆயினும் அம்மை மிகுந்த அன்புடன் சிறிது கூட உள்ளம் வெறுக்காது, வெந்நீரால் புண்களைக் கழுவி முன்றானையால் ஒற்றி, இளந் தழைகளைப் பரப்பிப் படுக்க வைத்து இரவும் பகலும் விசிறிக் கொண்டு, இனிய கனிகளை ஊட்டி உவப்புறச் செய்வாள். இவ்வாறு நளாயனி ஒரு நாள் போல் பல ஆண்டுகள் சலிப்பின்றி அன்புடன் தொண்டு செய்து வந்தாள். முனிவர் அவள் செய்யும் ஏவலுக்கும் அன்புக்கும் உள்ளம் உவந்து வியந்து கொள்வார். ஒரு நாள் முனிவருடைய விரல் அழுகி உண்ணும் உணவில் விழுந்துவிட்டது. அதனைக் கண்டு நளாயனி கண்ணீர் விட்டுப் புலம்பி அதனை விலக்கி அவ்வுணவை தேவாமுதமா யுண்டனள். அதனைக் கண்ட அருந் தவர் வியப்புற்று "ஆ! ஆ!! இவள் தெய்வக் கற்புடையவள். அருந்ததியின் மிக்கவள். இவளையொப்பார் முன்னும் பின்னுமில்லை" என்று மனதாரப் புகழ்ந்து கொண்டார்.

ஒருநாள் மௌத்கல்யர் மனைவியை நோக்கி, "மானே! எனக்குற்ற தொழுநோய் வரவர வளர்கின்றது. எலும்புந் தோலுமாகி விட்டேன். உலகவலஞ் செய்து திருத்தலங்களில் வழிபட்டும் புனித நீராடியும் இந்நோயை நீக்கிக்கொள்ள நினைக்கின்றேன் ஆனால் எழுந்திருக்கவும் இருக்கவும் கூடாத இந்நிலையில் அந்நினைவு எங்ஙனம் முற்றுப் பெறும்?" என்றார். நளாயனி கேட்டு, 'அன்புக்கடலே! அதுபற்றிக் கவலைவேண்டா; அடியேன் தலையிற் சுமந்து செல்வேன்" என்றுகூறி, ஒரு கூடையைத் தயாரித்து' அதில் மெல்லிய பூந் தழைகளையிட்டு, அதில் கணவனை இருக்க வைத்து, சும்மாடுவைத்துத் தலையில் சுமந்து கொண்டு புறப்பட்டாள். என்னே கற்பின் மாண்பு? கணவன்மீது வெயில்படா வண்ணம் மரநிழல்களினும், காலை மாலைகளிலும், சென்று வெயில் நேரத்தில் குளிர் சோலைகளில் இறக்கி, காய்கனியும் நீருந்தந்து பசியாற்றி உபசரிப்பள். அவளுடைய அன்புக்கடலில் முனிவர் விழுந்து, "இவளுடைய அளவற்ற அன்புக்கு என்னே கைம்மாறு செய்வது? இவளோ மன்னர்மன்னனது மாதவத்தால் உதித்து மலர்போல் வளர்ந்த செல்வமகள். பஞ்சும் மலரும் பரப்பி நடந்தவள். என்னைச் சுமந்து ஊர் ஊராகத் திரிகின்றனள். இந்நோயின் முடை நாற்றம் எனக்கே பொறுக்கமுடியவில்லை. இவள் சிறிதும் அருவருப்பின்றி வேண்டியவற்றை ஏவாமுன்னரே செய்கின்றனள்" இவள் ஒரு தெய்வப்பெண் என்று பற்பல மனத்தில் எண்ணி இறும்பூதுறுவர்.

நைமிசவனம்போய் அங்குள்ள முனிவர் பெருமக்களை வணங்குவித்தாள். பின் மாயை (அரித்துவாரம்) பதரிகாச்சிரமம் அயோத்தி, சித்திரகூடம் முதலியவைகளை வணங்குவித்துக்காசிப் பதியை யடைந்தாள். அங்கு மணிகர்ணிகா கட்டத்தில் நீராட்டுவித்துத் தானும் ஆடி, விசாலாட்சியம்மையையும் விசுவேசரையும் வழிபட்டு நின்றாள். சிலபகல் அங்கிருந்தபின் புறப்பட்டு, கங்கையைத்தாண்டும் வகையின்றி மனங்கவன்றாள். அவளுடைய அருங்குணத்தைக்கண்ட படகோட்டி பணிந்து அவளையும் முனிவரையும் படகில் ஏற்றி அக்கரை சேர்த்து கனிகளைத்தந்து இன்னுரைகூறி யனுப்பினன். நளாயனி அவன் அன்புக்கு மகிழ்ந்து வாழ்த்திவிட்டு கணவனைச்சுமந்து வடமதுரை, துவாரகை, அவந்தி

ஓம் குஹாய நம :

ஆறுவது சினம்

" சினத்தை நிந்தனை செயு முனிவரர் தொழ மகிழ்வோனே "

கோபம் நெருப்புக்கு நிகரானது. நெருப்பு மூண்டால் எப்படி வீட்டைக் கொளுத்திவிடுமோ அப்படி கோபம் மூண்டால் தன்னையே அடியோடு கெடுத்துவிடும்.

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

என்றார் தெய்வப்புலவர். ஒருவனுக்குள் தணியப்படுவது சினம் ஒன்றேயாம். கோபம் மூண்டபோது உடல் நடுங்கும்; கண் சிவக்கும்; சொல்தடுமாறும்; செய்வன இன்னது, சொல்வன இன்னது என்று தோன்றாது. அந்த வேளையில் நிலைக்கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள்; உங்கள் முகத்தை உங்களுக்கே பார்க்க வெறுப்பாயிருக்கும் என்றால் பிறருக்கு எப்படி இருக்கும் என்பதைச் சற்று நிதானித்து எண்ணுவோர்க்கு கோபம் உண்டாகாது.

முதலிய திருத்தலங்களைச் சேவித்து, யமுனை கோதாவரி சரஸ்வதி முதலிய சிறந்த நதிகளில் மூழ்கி தென்திசையை நோக்கி நடந்தாள். திருவேங்கடம், திருத்தணிகை, காஞ்சி, திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, தில்லைச்சிதம்பரம், சீர்காழி, திருவிடைமருதூர், சுவாமிமலை, திரிசிராப்பள்ளி, பழனிபுரி, முதலிய தலங்களை வணங்குவித்து மதுரையம்பதி புக்காள். அங்கு அங்கயற்கண்ணியம்மையையும் தென்னவனுலகாண்ட திருவாலவாயுடையாரையும் வழிபட்டு, மிகுந்த ஊக்கத்துடன் சேதுவிற் சென்று நீராட்டி, திருநெல்வேலி, திருச்செந்தில், கன்யாகுமாரி, திருவனந்தபுரம், திருச்செங்குன்றூர், திருவஞ்சைக்களம் முதலிய திருப்பதிகளை வணங்குவித்து, மேற்குக்கடற்கரை வழியே நந்தி தூர்க்க மலையை நண்ணினள். பாலாறு பிறக்கும் அங்கு கணவனை நீராட்டி சாளுவதேயம் போய்ச்சேர்ந்தாள்.

(தொடரும்)

ஒரு சமயம் கோபத்தீ மூண்டாலும் அதை உடனே அறிவு என்னும் தண்ணீரால் அணைக்கவேண்டும். கோபமில்லாதவர் உள்ளத்தில் அமைதி அருள் சாந்தம் பொறுமை இவைகள் குடிகொண்டிருக்கும்.

> "மறுகு யேறிய முனிவெனும் வடவைவெங் கனலை
> அறிவெனும் பெரும் பரவையம் புனலிஞலவித்தான்"
>
> —கம்பர்

முக்கியமாக நமது கோபம் எந்த இடத்தில் செல்லுமோ அங்கு அதனைக் காக்கவேண்டும். வேலைக்காரன், மனைவி, ஏழை இவர்களிடம் கோபத்தைக் காக்கவேண்டும். தன் கோபஞ் செல்லாத ஒரு பலவான், அதிகாரியிவர்களிடம் கோபத்தைக்காப்பது என்பது பொறுமையாகாது. ஒருவன் தன் நண்பனை நோக்கி "என்னை ஒருவர் "மடையா! ஒதுங்கு" என்று மரியாதையின்றிப் பேசினர். நான் பொறுமையாக இருந்தேன்" என்றான், நண்பன் "அப்படி உன்னைச் சொன்னது யார்?" என்றான். அதற்கு அவன் "வேறு யாருமில்லை. போலீஸ் கமிஷனர்" என்றானாம். பொறுமை எப்படி? கண்பார்வை கெட்டபின் நான் பிறன் மனைவியைப் பார்ப்பதில்லையென்ற புத்திமானுக்குத் தம்பி இவன்.

> செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
> காக்கினென் காவாக்கா லென்

என்றார் தெய்வப்புலவர். கோபங் குடிகொண்டமனதில்அமைதிநிலவாது. தொட்டதற்கெல்லாம் கோபம்என்பவனுக்கு சுகமே யிராது. உணவுக்குப்போவான். உணவுப்பொருளில் சிறிது உப்போபுளியோ கூடக் குறைய இருந்துவிட்டால் வெஞ்சினம்மூண்டு கையை உதறிக்கொண்டு எழுந்து பட்டினிகிடந்து வருந்துவன். கோபம் வருவதற்குக் காரணம் தன்னை மிகமிக உயர்வாக எண்ணிக்கொள்வது தான் அவர்களுக்குப் பூஜையில் இருக்கும்போதுகூட சாம்பிராணி புகைவதுபோல் கோபமும் புகைந்துகொண்டே யிருக்கும் கோபமுடையவர்க்குத் தவம் பலனைத்தாராது. விஸ்வாமித்திரர் தாம் செய்த தவங்களையெல்லாம் பலமுறை பாழுங் கோபமாகிய தேவதைக்குப் பலிகொடுத்துவிட்டார். கோபத்தாற் கெட்டவர் கோடிபேர், சுகம்பெறவேண்டுமானால் சாந்தத்தைக் கைக்கொள்ளவேண்

டும். "சாந்தமுலேக சௌக்யமுலேது" என்றார் தியாகப்பிரம்மம் துன்பத்திற்குக் காரணம் கோபம்; இன்பத்திற்குக் காரணம் சாந்தம். சினத்தை நிந்தனை செய்தவர் தொழுதால்தான் முருகவேள் மகிழ்கின்றார் என்பது முதலில் எழுதியுள்ள திருப்புகழடியின் கருத்து.

தன்மனத்தால் ஒருபோதும் வெகுளியை நினையானாயின் தான் கருதிய பேறுகள் அனைத்தும் அவனுக்கு ஒருங்கே எய்தும்

உள்ளியதெல்லா முடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின் —திருக்குறள்

ஒரு ஏழை இருந்தான். மிடியென்னும் கடலில் வீழ்ந்து வருந்தினான். தரித்திரம் மிகவும் கொடிதன்றோ? வறுமைப்பிணியால் வாடிய அவன்தன் வறுமை நீங்கவும் செல்வம் ஓங்கவும் தவம் புரிய ஒரு கானகத்திற் சென்று கண்மூடி நின்றான். அவ்வழியே நாரதர் வந்தார்; வீணையின் இனிய ஒலியைக் கேட்டவுடன் அவன் கண்திறந்து நாரதரை நமஸ்கரித்தான். நாரதர் "அப்பா யாது குறித்து தவஞ் செய்கின்றனை" என்று வினவினார். ஏழை "சுவாமி! நான் செல்வத்தை வேண்டியே தவம் புரிகின்றேன். தாங்கள் அருள் செய்யவேண்டும்" என்றான். நாரதர் 'உனக்குக் கோபம் சிறிதுகூட இல்லாமலிருந்தால் செல்வம் உண்டாகும்" என்றார். ஏழை "சுவாமி! எனக்குக் கோபமே வாராது. என்றான்" நாரதர் நாளை காலை இவ்விடத்திற்கு வா; செல்வம் உண்டாகின்ற வார்த்தைத் தருவேன்" என்று மறைந்துவிட்டார்

ஏழை மிகவும் மகிழ்ந்து வீட்டிற்குப்போய் படுத்தான். தூக்கம் வரவில்லை. அப்போதே பணக்காரன் ஆய்விட்டதாகவும், வீட்டை இடித்து பெரிய மாளிகையாகக் கட்டுவதாகவும் ஏழாவது மாடியில் தான் சோபாவில் சாய்ந்திருப்பதாகவும் தன்னிடம் நூற்றுக்கணக்கான ஏவலர் கைகட்டி நின்று ஏவல் கேட்பதாகவும், தன்மனைவி இந்திராணிபோல் தன் அருகில் இருப்பதாகவும் பலப்பல காட்சி மனக்கண்முன் வந்து வந்து தோன்றி மறைந்துகொண்டேயிருந்தன. தன்னை எல்லோரும் "மகாராஜ்" என்று அழைப்ப ஏ? கழுதைகளே போங்கள்" என்று தான் அதட்டுவதும்போன்ற பல எண்ணங்கள் மலைமலையாய் குவிந்துகொண்டிருந்தன.

பொழுதுபுலர்ந்தது; ஏழை எழுந்தான்; துள்ளிக்குதித்து காட்டை நாடி ஓடினான். போகின்ற வழியில் நாரதர் ஒரு பிச்சைக்காரனைப் போல் தோன்றி பிச்சைகேட்டார். அவன், இப்போது என்னிடம் ஒன்றுமில்லை. நாளை என் வீட்டிற்கு வா? தருகின்றேன்" என்று சொல்லிவிட்டு ஓடினான். முன் தவஞ் செய்த இடத்திற்குப் போனான். நாரதர் பழையபடியே காட்சி தந்தார். ஏழை வணங்கி நின்றான். நாரதர் அவன் கையில் ஒரு அழகிய கிண்ணத்தைத்தந்தார். "அப்பா! நீ இதை ஒருமுறை கவிழ்த்தால் பத்துப் பொற்காணம் (சவரன்) விழும். ஒரு நாளைக்கு ஒருமுறைதான் கவிழ்க்க வேண்டும். அடிக்கடி கவிழ்த்தால் உள்ளதும் போய்விடும். கோபம் இருக்கப்படாது. "கோபம் வந்தால் பொன் கிடைக்காது" என்று சொல்லி மறைந்தார்.

ஏழை கிண்ணத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி; கிண்ணத்தை ஒருமுறை கவிழ்த்தான். பொற்காசுகள் பலபல என்று 10 விழுந்தன. குதித்தான். பொன்காசுகளை யெடுத்துப் பெட்டியில் வைத்தான். உண்பதற்குக் கூட அவனுக்கு எண்ணம் உண்டாகவில்லை. தினம் பத்து பத்து பொற்காசுகள் உண்டானால் கணக்கற்ற செல்வச் சீமானாக ஆகிவிடலாம்; யாருக்கும் ஒருகாசுகூடக் கொடுக்கக்கூடாது" என்று எண்ணினான். "காலையில் வழியில் கேட்டவன் வந்தால் என் செய்வது? என்ற எண்ணமுண்டாயிற்று. "வந்தால் என்ன? இல்லையென்று விரட்டிவிடலாம்" என்று தீர்மானித்துக்கொண்டான். மறுநாள் காலையில் பொற்கிண்ணத்தை யெடுத்துக் கவிழ்க்கப்போகுஞ் சமயத்தில் நாரதர் முன்வந்த மாதிரியே பிச்சைக்காரனாக வந்து "ஐயா! வீட்டுக்கு வந்தால் தருகிறேன் என்றீரே! ஏதாவது கொடும்" என்று கெஞ்சினார். உடனே அவன் "சீ போ! எழுந்தவுடன் பிச்சைக்குவந்தனையா ? எங்கே உனக்குப் பொழுது விடிந்தது; நிற்காதே, போ" என்றான். நாரதப் பிச்சைக்காரன், ஐயா! ஐயா! ஏதாவது கொடும். நேற்று தருகிறேனென்று சொல்லிவிட்டு இன்று இல்லையென்னலாமா? என்று ஓயாது கத்தினார்.

உடனே அவனுக்குக் கோபம் மூண்டுவிட்டது. "சீ தரித்திரம் பிடித்த பயலே! ஓடு. நேற்று சொன்னேன். இன்று அதன்

ஓம் குஹாய நம:

கடல்கடத்தல்

(168-வது பக்கத் தொடர்ச்சி)

அன்பே உருவாய நமது மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையில் இறங்கினர். பேரானந்தப் பெருவாழ்வை யடைந்தார். தம்பிரான்றோழராம் சுந்தரமூர்த்தி நாயனர் திருவருள் துறையில் இறங்கினர். சிவமாந் திருவை எய்தினர். சமுமலச் செம்மலாம் ஞானசம்பந்தப் பெருந்தகையார் தோணிபுரத்தை யடைந்தார். தோடுடைய செவியனேடிரண்டறக் கலந்தார். வாக்கின் மன்னராம் வாகீசர் (அப்பர் சுவாமிகள்) பண்டைவிதியால் துறை தெரியாது சமணத்துறையிலிறங்கிவிட்டார். இன்னல்கள் பல அடைந்தார். நீற்றறையில் நொந்தார். ஆலகாலத்தையருந்தினர். கொல்களிறென்றும் அவர்பால் ஏவப்பட்டது. கடைசியாகக் கல்லோடு பிணைப்புண்டு கடலில் மிதந்து கறைமிடற்றன தின்னருளால் திருப்பாதிரிப்புலியூரையடைந்தார். அங்கு "ஆனந்த வெள்ளத்தினிடை மூழ்கி, அம்பலவர் தேனுந்துமலர்ப்பாதவமுதுண்டு, தெளிவெய்தி, ஊனந்தான் இலராகி, உவந்திருந்தார்.

படி தரவேண்டுமோ! அரிச்சந்திரனுக்கு அடுத்த வீட்டில் குடியிருந்தோமோ? பிச்சைக்காரப்பயலே! ஓடிப்போய்விடு, இல்லையேல் என் நாயை அவிழ்த்துவிடுவேன்" என்று கடிந்து கூறினன். நாரதர் உடனே அந்த வடிவத்தை மாற்றி தம் சொந்த உருவத்தை எடுத்து அப்பா! "கோபம் வரக்கூடாது, வந்தால் வரம்பலிக்காது என்றேன். இப்போது உனக்கு வந்த கோபம் உனது நாய்க்குக்கூட வாராது. ஆதலால் இனி அந்தக் கிண்ணத்தில் பொன்சவரன்கள் கிடைக்காது. இனியாவது சினத்தைத் தவிர்த்து செழித்திரு" என்று சொல்லி மறைந்தார். ஏழை தன் அறியாமைக்கும், தனக்குக்கிடைத்த பெரியவரத்தை கோபத்தால் இழந்ததற்கும், கோபம் குடிகெடுக்கும் என்ற முதுமொழியையும் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணுகி சாந்த சீலனுயினன். அதனல் அவன் சுகமுற்றான்.

ஓம் குஹாய நம :

திருஞான சம்பந்தர் தேவாரம்

திருச்சோற்றுத்துறை – பண் – தக்கராகம்

திருச்சிற்றம்பலம்.

செப்ப நேஞ்சே நெறிகொள் சிற்றின்பந்
துப்ப னென்னு தருளே துணையாக
வொப்ப ரொப்பர் பெருமானொளி வெண்ணீற்
றப்பர் சோற்றுத்துறை சென்றடை வோமே.

செப்ப நெஞ்சே — இதுவரை இல்வாழ்க்கையில் அறநெறிக்குட்பட்டு நேர்மையா யொழுகிவந்த எனது நெஞ்சமே,

---

நமது அருணகிரிநாதசுவாமிகளும் வேதநெறியே சென்று சைவத்துறையி லிறங்காததினுல் பலதுன்பமடைந்தார்; கொடிய நோய்வாய்ப் பட்டார். பிறகு திருமறையைப் பின்பற்றினர். திருவருணையில் திருவருளுக்குப் பாத்திரமானர், செவ்வேட்குமரனது சேவடிக்கீழ் இன்புற்றார்.

ஆகவே முத்திக்கு வித்து வேதநெறியும் சைவத்துறையுமாம். "அவை என்றும் நிலைபெற்றிருக்கவேண்டும், மானிடர்களாகிய நாமெல்லாம் அவற்றைச் சார்ந்துய்யவேண்டும்" என்னும்வாத்தை நமது திருஞானசம்பந்தசுவாமிகளே ஆண்டவன்பால் அழுது வேண்டினர் என்பது,

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டுபரவுவாம்.

என்ற சேக்கிழாரின் செவியமுதாம் செந்தமிழ்ப்பாவின் முதலிரண்டடியால் நன்கு விளங்குகிறது. ஆகவே மெய்யன்பர்களே, வேதநெறியையும், சைவத்துறைகளையும் விளக்கிக்காட்டுதற்கு யாம் எவ்வாறு வன்மையுடையேம். யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்; ஆன்றோர் பிழைபொறுக்க.

"கனகசபை"

நெறிகோள் சிற்றின்பம் — இல்லற நெறியிலொழுகி ஐம்பொறிகள் முதலியவற்றில் புறத்திலுள்ள ஐம்புலநுகர்வுகளை நுகரும் நெறிவாழ்வுச் சிற்றின்பத்தை,

நுப்பன் என்றேறுத— நுகருவேனென்று கூறுத அதாவது நுகருதலை மறுத்து அருளே துணையாக ஒப்பர் — பேரின்பம் நுகருதற்கு அருளே தங்களுக்கேதுவாயிருக்கும் துணையென்று அறிந்து அவ்வருளுக்கு நேர்மையாய் ஒத்து ஒழுகும் மாந்தரை,

ஒப்பர் — அடியாராக ஏற்றுக்கொண்டு அருள் செய்கிறவரும்,

பெருமான் — உயிர்களுக்கெல்லாம் தலைவரும்,

ஒளிகோள் வெண்ணீற்று அப்பர் — ஒளியோடு கூடிய வெண்மையான திருநீற்றை தமது திருமேனியில் அணிந்திருக்கிற தந்தையாருமாகிய சிவபெருமான்,

சோற்றுத் துறை சென்று அடைவோம் — திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற திருச்சோற்றுத்துறைக்குப் போய் அங்கே அவரைத் தொழுது நாம் உய்வோம்,

(வி—ரை).

செப்பம் - நேர்மை - செம்மை. அதாவது, கருத்தும், சொல்லும், செயலும் நேர்மைப்பட்டொழுகும் ஒழுக்கம். இவ்வொழுக்கம் இக்காலத்து மக்களிடத்தில் காண்பதரிதாயிருக்கிறது. செப்பநெஞ்சே என்பது இவ்வாக்கைக்குரிய அறநெறியில் கருத்தும், சொல்லும், செயலும் தம்முள் மாறுகாமல் நேர்மையாயிருக்கும்படி பொழுகும் நெஞ்சமே. இல்வாழ்க்கைக்குரிய அறநெறியில் நேர்மையாயொழுகுகிற மாந்தரே, சில பிறவிகளில் அதனை வாழ்ந்துவந்த அனுபவத்தின் பயனாக உலகநெறிச் சிற்றின்பத்தை உவர்த்துப் பேரின்ப நாட்டமுடையவராய் அதனை அடைதற்கேதுவாயுள்ள வீட்டுநெறியில் செல்லுதற்கு பக்குவமுடைய நெஞ்சுடையவராவர். ஆதலின் அடிகள் நெஞ்சே என்று கூறாது செப்பநெஞ்சே என்றார். நெறி - இல்வாழ்க்கைக்குரிய அறநெறியைக் குறிக்கிறது, நெறிகோள் சிற்றின்பம் என்பது அவ்வறநெறியில் நுகரத்தகுவனவாகிய சிற்றின்ப நுகர்வுகள். பிறர் பொருள் வெஃகி அதனைக் கவர்தல், பொறாமை, நடுவுநிலையின்மை, பிறனில் விழைதல் முதலியன அறநெறிக்குப் புறம்பான தீயொழுக்கம். நெறிகோள் சிற்றின்பமென்பதனாலே அச்சிற்றின்பத்தை நுகர்தலினாலே பேரின்ப நாட்டமடைதற்கு பக்குவமுண்டாதலால் அதன் நுகர்வு உலகநெறி வாழ்வில் ஒருவனுக்குத் தகுந்ததென்பது பெறப்பட்டது. அருளே என்பதிலுள்ள ஏகாரம் ஐம்பொறிகள் முதலிய கருவிகளால் நுகரும் சிற்றின்பத்தைப் பிரித்து கூறும் பிரிநிலைப்பொருளில் வந்தது. (தொடரும்)